


# இந்துவின் வீச்சு இதழ் - 05

01.10.2020 தொடக்கம் 31.12.2020 வரை



நடராஜர்

**போசகர்:**
திரு.இரத்தினம் செந்தில்மாறன்
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**பொறுப்பாசிரியர்கள்**

திரு.சி.பரணீதரன்
(உப அதிபர்)

திரு.கு.மகிழ்ச்சிகரன்
(வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்)

**வடிவமைப்பு**
திருமதி.சசீதா மணிவண்ணன்

**வெளியீடு :- 07.07.2023**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
021 222 2431
Principal@jhc.lk
www.facebook.com/
JaffnaHinducollegeoffcial

**அதிபரின் உள்ளத்திலிருந்து...**

தமிழர் தாம் வாழ்விற்கு ஒளியூட்டிக்கொண்டிருக்கும் எமது இந்து அன்னையின் பயணத்தின் சாதனைகளையும் சவால்களையும் பதிவுகளனைத்தையும் தாங்கி வரும் இந்து வீச்சின் நான்காவது இதழ் வெளிவருவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். எமது கல்லூரியின் வளர்ச்சியில் பங்காற்றும் பழைய மாணவர்கள் மற்றும் கல்லூரிச் சமூகம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஒவ்வொரு நிகழ்வு பற்றியும், பணி பற்றியும், அதன் செயற்பாடு பற்றியும் அறிந்திருக்க வேண்டும் என்பதுடன் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்குமாக இந்த இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டும் என விரும்புகிறேன்.

நாட்டில் ஏற்பட்ட பேரிடர்ச் சூழலில் எமது கல்லூரியினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்நிலைக் கற்பித்தல் பணி அனைத்துத் தமிழ் மாணவர்களுக்குமாக விரிவாக்கம் செய்யப்பட்ட போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியும் பணியும் அனைத்துத் தமிழர்களுக்குமானது என நிறைவடைந்தேன். அதன் பிரகாரம் கல்லூரியின் வளர்ச்சியில் தொழிநுட்பம், வளவிருத்தி என்பன விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்தோம். இத்தகைய விருத்திப் பணிகளில் பழைய மாணவர்களின் பங்கு மகத்தானது. அத்துடன் அனைவரது ஒன்றுபட்ட செயற்பாடும், சேவையும் அவற்றின் ஒருங்கிணைப்பும் அவசியம். அத்தகைய பணிகள் பற்றிய விபரங்களையும், செய்திகளையும் தாங்கி இந்துவின் வீச்சு நான்காவது இதழ் வெளிவரும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.இரத்தினம் செந்தில்மாறன்.
அதிபர்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

♦ **2020.10.04 ஆசிரியர் தினம்**

♦ 2020.10.06 அன்று ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்கள் எதிர் மாணவர்களுக்கிடையிலான கால்பந்து, துடுப்பாட்டம், சதுரங்கம், பூப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.
























♦ 2020.10.15 அன்று யாழ் இந்துக் கல்லூரியின் உத்தியோகபூர்வ சமூக வலைத்தளப் பக்கங்கள் மற்றும் தொடர்பு வழிமுறைகள் வெளியிடப்பட்டன.




♦ 2020.10.24 அன்று கடந்த கொரோணா பேரிடர் காலத்தின் போது யாழ் இந்துவில் நடைபெற்ற நிகழ்நிலை வகுப்புக்களின் நேரலைகளின் தொகுப்புக்களை மீள ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலில் பயன்பெறக் கூடியவாறு கல்லூரி Youtube பக்கத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தரம் 6 :

https://www.youtube.com/watch?v=KCHh09CDw_w...

தரம் 7 :
https://www.youtube.com/watch?v=8WQIxikXz_I...
தரம் 8 :
https://www.youtube.com/watch?v=mrsmp0pMffo...
தரம் 9 :
https://www.youtube.com/watch?v=UmHk7-YCF28...
தரம் 10 :
https://www.youtube.com/watch?v=q07hCeJ9ClY...
தரம் 11 :
https://www.youtube.com/watch?v=jpMu4bG8eEE...
க.பொ.த உ.த 2022 :

https://www.youtube.com/watch?v=zgc5WU1WLwU...
க.பொ.த உ.த 2021 :

https://www.youtube.com/watch?v=0cWxzqTxdRM...

♦ 2020.11.02 தாய்லாந்து அனைத்துலக கணித ஒலிம்பியாட் போட்டியில், முதுநிலை இரண்டாம் பிரிவில் பங்குபற்றி வெள்ளிப் பதக்கத்தைப் பெற்று யாழ் இந்து மாணவன் செல்வன்.நடேசமூர்த்தி சிவமைந்தன் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்.




♦ 2020.11.14 அன்று உலகெங்கும் பரந்து விரிந்துள்ள எமது கல்லூரியின் பழைய மாணவர்களால் ஆற்றப்படும் சாதனைகள் மற்றும் போற்றத்தக்க பணிகளை ஆவணப்படுத்திடவும் அவற்றை அனைவரிடமும் கொண்டுபோய் சேர்த்திடுவதற்கான ஓர் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அனுப்பவேண்டிய விடயங்கள் :

முழுப்பெயர், உயர்தரத்திற்குத் தோற்றிய ஆண்டு, சாதனை விபரம், அவைதொடர்பான ஒளிப்படங்கள், சாதனை விபரம், அவை தொடர்பான ஒளிப்படங்கள். தரவுகளை அனுப்ப வேண்டிய முகவரி – info@jhc.lk




♦ அமெரிக்க வலிப்பு நோயாளர் சமூகத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான இளம் ஆய்வாளர் விருதினைப்பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர், உதவிப் பேராசிரியர் வரதராஜ் யோகதீசன் (2007 உயர் தரம்) அவர்களுக்கு கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.




♦ 2020.11.18 கனேடிய பாதுகாப்புப் படையில் 22 ஆண்டுகள் நற்பணி ஆற்றியமைக்காக உயர் மதிப்புறு விருதான Canadian Forces' Decoration (CD) First Clasp விருது வழங்கி மதிப்புச் செய்யப்பட்ட, கனேடிய பாதுகாப்புப் படைத் தலைமையக முதுநிலை நிதியியல் நிர்வாகி, யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் திரு.மதியாபரணம் வாகீசன் (1988ம் ஆண்டு உயர் தரம்)அவர்களுக்கு கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. இந்த உயர்மதிப்பைப் பெற்றுக் கொண்ட முதல் ஈழத்தமிழ் கனேடியர் இவரேயாவார்.




♦ 2020.11.22 அன்று யாழ் இந்துக்கல்லூரி வளாகம் முழுவதும் மூன்றாம் தவணை கல்வி செயற்பாட்டிற்காக தொற்று நீக்கல் செயற்பாடு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது வகுப்பறைகள், மண்டபங்கள், கணனி அலகு, நூலகம், பிரார்த்தனை மண்டபம், கோயில், மன்றங்கள் கழகங்களின் அறைகள், களஞ்சியசாலை,நிர்வாகப் பகுதி, மாணவர் விடுதி, நடைபாதை என அனைத்து பகுதியும் தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

♦ 2020.11.23 உயர் தரப்பிரிவு மாணவர்களின் பாவனைக்காக அனைத்து வசதிகளுடனும் புனரமைப்பு செய்யப்பட்ட மலசலகூடம் திறந்து வைக்கப்பட்டது.






♦2020.11.27 யாழ்ப்பாணம் இந்து யாழ் இந்துக் கல்லூரியினை பசுமைப்படுத்தும் செயற்திட்டத்திற்காக பழைய மாணவன் வைத்தியர் கு.சுமன் (2002 உயர் தரம்) அவர்கள் தனது மகன் ஜிதேசின் பிறந்த தினத்தினை (நவம்பர்–27) முன்னிட்டு ரூபா இரண்டு இலட்சம் பெறுமதியான பசுமையாக்கல் வேலைத் திட்டத்தினை இரண்டாவது வருடமும் தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தார். அதன் மூலம் யாழ் இந்துவின் பல பகுதிகளிலும் அழகு தாவரங்கள் மற்றும் மரங்கள் நடப்பட்டு பாடசாலைச் சூழல் அழகு படுத்தப்படுத்தப்பட்டது.







♦ 2020.12.05 அன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், விக்ரோரியா கிளையால் "கானமழை" நிகழ்வு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் சேகரிக்கப்படும் நிதியின் ஒரு பகுதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான உள நல விருத்தி மற்றும் விளையாட்டு ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு "மகிழகத்தின்" ஊடாக பயன்படுத்தப்பட்டுவருகிறது.





♦ 2020.12.09 பாடசாலை நில அளவை படம் மற்றும் நீர் வடிகாலமைப்பு திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு பாடசாலையிடம் கையளிக்கப்பட்டது. இதற்கான ஒத்துழைப்பினை திரு.அ.முகுந்தன் (1994 உயர் தரம்) மற்றும் திரு.பொ.சிவானந்தன் (1988 உயர் தரம்) வழங்கியிருந்தார்கள்.






♦ 2020.12.14 அன்று தரம் 6 வகுப்பு மாணவர்களுக்கு "மின்னணு குறியீட்டு முறைமை" (coding) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.





**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் அவுஸ்திரேலியா, விக்டோரியா கிளையின் அனுசரணையுடன் மகிழகத்தினால் கல்லூரி மாணவர்களிடையே நடாத்தப்பெற்ற கட்டுரைப்போட்டியில் இடைப்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை.**

# கற்றல் செயற்பாடுகளும் கவனக்கலைப்பான்களும்.

**செல்வன்.A.சரணியன்**

மனிதன் மனிதனாக்கப்பட்டவன். நாகரிகம் வளர வளர நாகரிகத்தை அநாகரிகமாக மாற்றி கல்வி கற்கவேண்டிய நேரத்தில் கற்றல் செயல்பாடுகளை மறந்து இந்த கவனக்கலைப்பான்களுக்குள் தனது நேரத்தை செலவிடுகிறான். கற்றல் செயல்பாடுகளுக்கு இந்தக் கவனக்கலைப்பான்கள் எல்லா வகையிலும் இடையூறாக இருக்கின்றன என்றால் அது மிகையாகாது. மனிதன் கல்வியாலேயே வளரமுடியும். ஆனால் இந்தக் கவனக்கலைப்பான்கள் அந்த நேரங்களில் கல்வி பயிலும் சிறு குழந்தைகள் முதல் பெரியவர் வரை எல்லோரையும் தவிர்க்கின்றன. தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் என பல்வேறுபட்ட சிக்கல் நிறைந்த வலைக்குள் மனிதன் விழுந்துவிட்டான். சரியான பாதையில் வழிநடத்தப்படாத மனிதன் தன்னைத்தானே திடப்படுத்தி கவனக் கலைப்பான்களைத் தேடி ஓடுகின்றான்.
கற்றல் செயற்பாடுகளைக் குழப்புவதால்தான் இவற்றை கவனக் கலைப்பான்கள் என்கின்றனர். அதாவது மாணவர்களாகிய எம்முடைய மனத்தினைக் கலைக்கும் சாதனங்கள் இவையாகும். இது மனித நாகரிகத்தின் வளர்ச்சி என்னும் பார்வையில் இருக்கும் பொழுது சரியாக இருந்தாலும் இளம் சமூகம் என்று யோசித்தால் மிகவும் வருத்தப்படக்கூடிய குறைபாடாகவே காணப்படுகிறது. மாணவப்பருவத்தில் மறைக்கப்பட முடியாத ஆணிற்கு பெண்மீதும், பெண்ணிற்கு ஆண்மீதும் தோன்றும் காதல் என்ற போர்வையிலான கவர்ச்சிகள் அனைத்தும் கற்றல் செயற்பாடுகளுக்கு கவனக்கலைப்பான்களே. ஆக, இங்கு இலத்திரனியலைத் தாண்டி மனித மனமும் மூளையின் மீது தாக்கத்தைச் செலுத்துகின்றன. ஒருவன் மிகச்சரியான வேலையைச் செய்ய இந்தக் கவனக்கலைப்பான்கள் பெரிதும் தடையாக இருக்கின்றன என்றால் மிகையாகாது.
இந்த இலத்திரனியல் சாதனங்களின் எழுச்சி இளம் சமூகத்தின் அழிவுக்கு காரணமாகிவிடுமெனில் அது மிகையாகாது. படிக்கும் மாணவனுக்கு எதற்குத் தொலைபேசி? தன்னைத்தானே சரியானவழியில் நெறிப்படுத்தாத பொழுது யாராலும் ஒன்றும் செய்ய இயலாது. கல்வியால் முன்னேற்றத்துடிக்கும் ஒவ்வொரு மாணவனும் ஒரு குறிப்பிட்ட வயதுவரை இந்தக் கவனக்கலைப்பான்களை நாடாமல் இருப்பது நல்லது. கல்வி கரையில, கற்பவர் நாட்சில ஆதலால் அவற்றை சரியாக நெறிப்படுத்த வேண்டும். இந்தத் தொலைபேசி, தொலைக்காட்சி என்பன கற்றல் செயல்பாடுகளைத் தாண்டி சமூகச் சீர்குலைவுக்கும் காரணமாகின்றன.

பள்ளிப்பருவத்தில் படிப்பை நாசமாக்கி தம் வாழ்வை சீர்குலைக்க நினைக்கும் மாணவர்களே இவற்றை விரும்புபவரர். பெற்றோரின் உழைப்பு, இலட்சியம், அர்ப்பணிப்பு என்பவற்றை உணர்ந்த மாணவன் இவற்றை விரும்பமாட்டான். சரியான வழியில் வாழ்க்கையை வாழப் பழக்காததால்தான் அவன் தவறான வழியில் செல்கிறான். இன்றைய யாழ்ப்பாண மாணவர்கள் பலர் அடிபாடுகள் மற்றும் தேவையற்ற குழுமோதல்களில் ஈடுபடுவதற்கு சமூக வலைத்தளங்கள் பெரிதும் உதவுகின்றன. "முகப்புத்தகத்தில் ஏற்பட்ட சிறுதகராறு காரணமாக மாணவனுக்கு வாள்வீச்சு" இதுதான் இன்றைய செய்தி. "இன்ஸ்டாகிராமில் ஏற்பட்ட குழுமோதலால் நாங்கள் பலி" என்ற செய்தியும் இன்னும் சில நாட்களில் வந்துவிடும். அப்போதுகூட இன்றைய தமிழ்ப் பத்திரிக்கையாளர் அதனை நெறிப்படுத்த பேனாவை எடுத்தால் அவர்களுக்கும் வாள்வீச்சு நடக்கலாம்.

குழந்தைகள்தான் தொலைபேசியும் கையுமாகத் திரிகின்றன என்றால் பெற்றோருக்கு எங்குபோனது அறிவு? சிறு குழந்தைதானே என்று விடுவதால், அது சிறிது சிறிதாக வளர்ந்து அந்தக் கவனக்கலைப்பான்களில் மூழ்கித் தம் வாழ்க்கையை நாசம் செய்கின்றனர். இதற்கு எல்லாம் முதற்காரணமும் நிமித்த காரணமும் பெற்றோர்களே ஆவர். தம்பிள்ளையை தம்மைப் போல் அல்லாமல் சுதந்திரமாக வளரவிட்டாலும், சிறந்த கண்காணிப்புடன் வளர்ப்பது மிகவும் அவசியம். ஆகவே சிறந்த குழந்தைகளை பெரிய படிப்பாளியாக மாற்ற பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். இன்றைய சமூக மாற்றத்துக்கு ஒரே தீர்வு அதிகாரங்களை முடக்கி வைப்பதே ஆகும்.

ஆசிரியர்கள் சிறந்தவொரு சமுதாயத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றார்கள். மாணவர்களுக்கும் ஆசிரியருக்குமான தொடர்பை இந்தக் கவனக்கலைப்பான்கள் சிதைக்கின்றன. மாணவர்களுக்கான கற்றல் சூழலையையும் அதற்கான கட்டுமானத்தையும் வகுப்பவர் ஆசிரியர். ஆனால் அவரின் கவனத்தையும் இந்தக் கலைப்பான்கள் குழப்பிவிடுகின்றன எனும் போது மாணவனை எவ்வாறு மாற்றுவது? இன்றைய கல்விச்சூழலை இந்த இலத்திரனியல் சாதனங்களே தீர்மானிக்கின்றன. இவற்றைத் தடுக்காமல் ஒளிமயமான, பலமான சமுதாயத்தை எம்மால் கட்டி எழுப்ப முடியாது.

தொலைபேசிகள் எம்முடைய தேவைக்காக உருவாக்கப்பட்டவை, ஆனால் இன்று நாம் அவற்றுக்காக எம்மைத் தயார்படுத்தி, அவற்றுக்கென நேரத்தை ஒதுக்கி, வீணடிக்கின்றோம். சமூக வலைத்தளங்களில் முகப்புத்தகம் மிகவும் பிரபல்யமானது. அதனால் பல மாணவர்கள் அதில் மூழ்கிக்கிடக்கின்றனர். பரீட்சைக்குப் படிக்கும்போதும் இந்தத் தொலைபேசிகள் நம்மை படிக்க விடுவதில்லை புத்தகத்தை வாசிக்கும் நேரத்தை விட முகப்புத்தகத்தை வாசிக்கும் நேரம் தான் அதிகமாக இருக்கின்றது.

இது சாதாரணமாக நிகழ்ந்த ஒன்றோ, அல்லது தமிழ்ச் சமூகம் மீளெழக் கூடாது என்று திட்டமிட்டு தந்திரமாக கட்டவிழ்த்து விடப்பட்ட ஒன்றோ என்றுகூட இந்தச் சமூகம் சிந்தித்துப் பார்க்கவில்லை. இன்ஸ்ரகிராமில் ஏற்பட்ட காதலால் காதலன் சாவு. ஆனால் இதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. இது போன்ற தேவையற்ற செயற்பாடுகளால் நமது கல்வியும் வாழ்வும் முடிந்து விடுகின்றன. பள்ளிப்பருவத்தில் ஆணிற்கும் பெண்ணிற்குமான ஊடல் கல்விக்குப் பெரும் இடையூறாக இருப்பது மட்டுமல்லாமல் அவன் உயிரிற்கும் ஆபத்தாக முடிகிறது.

இன்றைய யாழ்ப்பாண சமூகத்திற்கு வெளிநாட்டின் நவநாகரிக கலாச்சாரம் பெரும் கவனக்கலைப்பானாகத் திகழ்கிறது. வெளிநாட்டில் வாழ்பவர்களின் கலாச்சாரம் வேறு நம்முடைய கலாச்சாரம் வேறு. அவர்களது கலாச்சாரத்தை நம் சமூகம் பின்பற்றத் துடிப்பது முட்டாள்தனம் என்பது மட்டுமின்றி நம் கலாச்சாரத்தின் வீழ்ச்சிக்கும் காரணமாகிறது. இன்றைய மாணவர்கள் கல்வியை விட தம்மை அலங்காரப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டுவது எமது கல்வித்துறையின் வீழ்ச்சியைக் காட்டுகிறது.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் தொடர் நாடகங்கள், வாழ்வோடு பின்னிப்பிணைந்து காணப்படுவதால், தம் வாழ்வின் பிரச்சினைகளுக்கு இந்நாடகங்களில் தீர்வைத் தேடுகிறார்கள். தவறான முடிவுகளை எடுக்கிறார்கள். கல்விக்கு இவை பெரும் தடையாக இருக்கின்றன. தாம் எதற்காகப் பிறந்தோம் என்ற கேள்விகளுக்கெல்லாம் இந்தக் கவனக்கலைப்பான்கள் பெரிதும் தடையாக இருக்கின்றன. இவை நம் சமூ கத்தைப் பின்னோக்கி இழுக்கும் கரும்புள்ளிகள். கற்றல் செயற்பாடுகளைப் பெரிதும் குழப்புகின்றன. எம்மை நாம் தான் சரிப்படுத்த வேண்டும். நமக்காகத்தான் அவை உருவாக்கப்பட்டவையே தவிர அவற்றிற்காக நாம் உருவாக்கப்படவில்லை. அவற்றுக்காக நாம் பாடுபடவோ, போராடவோ தேவையில்லை. ஆகவே மாணவர்களாகிய நாம் அவற்றை அடியோடு ஒதுக்கி நம் வாழ்வில் ஒளியேற்ற கவனக்கலைப்பான்கள் அற்ற கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவோம்.

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆஸ்திரேலியா, விக்டோரியா கிளையின் அனுசரணையுடன் மகிழகத்தினால் கல்லூரி மாணவர்களிடையே நடாத்தப்பெற்ற கட்டுரைப்போட்டியில் மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை.**

# நல்ல மாணவர்களின் உருவாக்கத்திற்கு கற்றல் சூழலின் பங்களிப்பு

**செல்வன்.ஜெ.கிஷேக் தரம் 12 உயிரியல்**



மாணவர்களின் வாழ்வு என்பது ஒரு போராட்டகாலம் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். மாணவர் வாழ்வு என்பது எத்தனை வருடங்கள் என்ற கேள்விக்கு விடையே இல்லாமல் போயிருக்கின்றது.

“ஆறு வயதில் மொட்டுவிடாமல் இருந்தாலும் அறுபது வயதில் கொட்டுவிடாமல் இருந்தால் போதும்” என்கிறார் கவிப்பேரரசு.

ஆனால் ஒட்டுமொத்த உலகமும் மாணவர் பருவம் என்பதை *6 – 16* வயது என்ற கட்டாயக்கல்வி வயது நிலையை கருத்தாகம் பார்க்கின்றது. இந்நிலையைத் தான் நல்ல மாணவர் மனிதராக மிளிர்வதற்கான அடிப்படை நிலை எனக் கொள்ளலாம். இவ்வயது நிலையில் கல்வி கற்கின்ற சூழல் கற்றல் சூழல் என வரையறுப்பது சாலச் சிறந்ததாகும். இது சிறுவர் பாடசாலை, மத்திய பாடசாலை, உயர்தர பாடசாலை, அறநெறி பாடசாலை மற்றும் தனியார் பாடசாலை என்ற ரீதியிலும் பார்க்க வேண்டிய ஒன்றாகும். இவ்வாறான கற்றல் சூழல் நல்ல மாணவர்களின் உருவாக்கத்தில் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது என்பது அடிக்கோடு இடப்பட வேண்டிய விடயம்.

நன்மை, தீமை இவையின்றி அமையாது எவையும் என்றார் புவியீர்ப்புக் கொள்கையின் தந்தை ஐசாக் நியூட்டன். “எந்த வினைக்கும் எதிர் வினை வரும்” என்பதே அவரது கூற்றாகி இருக்கின்றது. அப்படி இல்லையானால் உலகம் சமநிலை அற்றதாகிவிடும் என்ற ரீதியில் தான் தீய சிந்தனை உருவாக்கப்படுகின்றனவாம் என்கிறார்கள் மனோத்துவ நிபுணர்கள் இந்த வாய்ப்பாட்டிற்கு மாணவ நிலையும் பொருந்துகிறது.

“காலத்திற்கு ஏற்ற மாதிரி தகவமைத்துக் கொள்பவன், உலக நேரத்தில் இருந்து தனது வெற்றிக்கான வினாடிகளைத் திருடிக் கொள்பவன், தன் மனித குலத்தின் கல்வி கற்காதவனுக்காக சேர்த்துப் படித்துக் கொள்பவன், தனது இலட்சிய நெறி பிறழாதவன், தனது வாய்ப்புகளை வெற்றிப் படிக்கட்டுகளாய் மாற்றியமைப்பவன், தோல்விகளில் துவண்டுவிடாதவன், கடமைக்காக கண் தூங்காதவன், அறம் கல்வியின் சாயல் கொண்டது என்று நினைப்பவன்” இவ்வாறான சில பண்புகளை நல்ல மாணாக்கர்கள் கொண்டிருப்பார்கள் என்று பொதுவுடமை சித்தாந்தி கார்ஸ் மார்க்ஸ் தனது “மாணவப் பருவம்” என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கற்றல் சூழல் என்ற பதமானது உலகின் முழுமையை குறித்து நிற்கின்றது. கற்றலுக்கு எல்லை கிடையாது. உலகிற்கே தத்துவவெளி பரப்பிய தத்துவஞானி சோக்கிரட்டீஸ் தான் மரணதண்டனையினால் இறப்பதற்கு முதல் நாள் கம்பளிப் பின்னல் கலையை கற்றுத் தரும்படி கேட்டுக்கொண்டார். கத்தி முனையாலும் புத்தியறிவாலும் உலகை வெல்வேன் என்று சொன்ன நெப்போலியன் போர்க்களம் செல்லும் போது நூல்களையும் எடுத்துச் சென்றார். இவ்வாறாக கற்றலின் மகிமையை உலகை வென்ற பல உன்னதர்கள் தெரிவித்துள்ளனர். இப்படியாக சொல்லப்படும் கற்றல் அமைந்திருக்கும் சூழல் நல்ல முறையில் அமைந்திருக்க வேண்டியது அவசியமாகும். மாணவர் பருவத்தில் ஒரு மாணவன் பல்வேறு சூழல்களுக்கு பழக்கப்படுகிறான். அவை குடும்பச்சூழல், கற்றல் சூழல் என நோக்கலாம். இந்த கற்றல் சூழலை தான் மாணவன் தன் பெரிய களமாக பயன்படுத்துகிறான். அதேபோல் மாணவன் பலமணி நேரம் செலவிடுவதும் கற்றல் சூழலில் தான். இதில் ஆசிரியர்கள், சகபாடிகள் (நண்பர்கள்) என்ற எல்லா வகையோரையும் கொண்ட மேலே குறிப்பிட்ட பள்ளிச் சமூகம் பெரும்பான்மையாக உள்ளது.

நண்பர்கள் என்ற வட்டம் தான் பெற்றோரைத் தாண்டி இன்றய காலத்தில் பேசப்படுகின்ற ஒன்றாகி காணப்படுகிறது. நல்ல மனிதர்கள் உருவாவதற்கு நல்ல நண்பர்கள் வேண்டும். தான் இறப்பிலும் தன் நண்பன் வாழ வேண்டும் அவன் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திற்கு மகாபாரதத்தில் வரும் கர்ணன் எடுத்துக்காட்டாகும்.

ஆசிரியர்கள் என்ற மனிதர்கள் வெறுமனே அறிவாளிகளாக மாத்திரம் அல்ல, அவர்கள் நல்ல மனிதர்களாக மாணாக்கர்களாக வருவதற்கு அடிகோலுபவர்கள். இவர்களே அன்று ஏகலைவன் தனது குருவான துரோணாச்சாரியாருக்கு தன் கட்டைவிரலை தானமாகக் கொடுத்ததையும் உலகமே வியந்த மாவீரன் அலெக்ஸ்சாண்டர் தனது ஆசானுக்கு (அரிஸ்ரோட்டில்) கூறிய பொன்மொழிகள் “அலெக்ஸ்சாண்டர் நினைத்தால் ஆயிரம் அலெக்ஸ்சாண்டர்களை உருவாக்கலாம், ஆனால் ஆயிரம் அலெக்ஸ்சாண்டர்கள் சேர்ந்தாலும் ஒரு அரிஸ்ரோட்டிலை உருவாக்க முடியாது என்றார். ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவர்களுக்காக தங்களை ஏணிகளாக மாற்றியமைத்தவர்கள். அவர்கள் உயர்வது கிடையாது. மாணவர்களை உயர்த்திவிடும் மகத்தான காரியத்தை செய்கின்றனர். “மாதா பிதா குரு தெய்வம்” என்ற அன்றய காலத்தில் தேவையுடன் கூறியிருக்கிறார்கள். அவர்கள் நடமாடும் தெய்வங்கள்.

ஆசிரியர்கள் தெய்வங்கள் எனின் பாடசாலையை சமூகம் கோவில் என்பதில் பிழையில்லை. பாடசாலை என்பது பிரமாண்டமான தொழிற்சாலை. இதிலிருந்து மருத்துவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பொறியியலாளர்கள், இலக்கியவாதிகள், பட்டயக் கணக்காளர்கள் என பல உற்பத்திகளை தரமாகவும் சிறப்பாகவும் இந்தச் சமூகத்திற்கு வெளிவிடுகின்றது. அறிவினை மாத்திரம் அல்லாது ஆளுமை, தலைமைத்துவம் போன்ற நற்குணங்களையும் போதிக்கின்றன. இவ்வாறான செயற்பாடு எதிர்காலத்திற்கு நல்ல தலைவர்கள் உருவாகவும் வழிசமைக்கின்றது. இதற்கான எடுத்துக்காட்டாக பாடசாலைகளில் இயங்கி வரும் பழைய மாணவர் சங்கங்களை உதாரணமாக எடுத்துக் கூறலாம்.

இன்றைய காலத்தில் மாணவர்கள் வழிதவறிப் போகிறார்கள் என்றால் முதலாவது குற்றவாளியாக கூறப்படுவது அவர்கள், இரண்டாம் பட்சம் அவர்கள் குடும்பம். நூறில் இரண்டு பிழைக்கின்றது என்பதற்காக நல்ல மாணவர்களை கற்றல் சூழல் உருவாக்குவதில்லை என்றால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றில்லை.

எனவே நல்ல மாணவர்களின் வாழ்வுக்கும் அவர்களின் வளர்ச்சிக்கும் நல்ல கற்றல் சூழல் பின்னணியாக அமைந்துள்ளது. இது உள்ளங்கை நெல்லிக்கனியாக உலகியல் வரலாற்றின் ஊடாகவும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக”

## Donation - Things

| No | Date | Donors details | Donated Items | No of Items | Place | Amount | Donation Receipt No | Master Inventory | Inventory folio No |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 06.10.2020 | Mr.S.Jeyapiragash (JHC-A/L 89-UK) | Pendrives for teachers & Non academic Staff | 97 | For Teachers' Day | 123,025.00 | - | Not inventorised | |
| 2 | 29.10.2020 | Dr.S.Jothilingam (Old Boy) | CCTV for sabalingam hall (3 Camers, 1 Switch) | | Sabalingam hall | 115,533.00 | 4843 | Fitting Register | |
| 3 | 26.11.2020 | Dr.K.Suman (A/L 2002 Old Boy) | Plants and pots | | | 200,000.00 | - | Not Inventorised | Not Inventorised |
| 4 | 11.12.2020 | A/L 89 Batch | 96" Smart Board | 2 | Commerce & Arts Class rooms | 535,000.00 | 4675 | V II P -27 & V II P -65 | Book 15 Page 69 |

## Contribution - Work

| No | Date | Donors details | Work | Place | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | 06.12.2020 | Dr.S.Sivathasan | Toilet interier wall removing and cleaning | A block | 35,000.00 |
| 2 | 26.12.2020 | Colombo OBA | School threewheel repair | | 34,260.00 |

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 07.07.2023ல் வெளியிடப்பட்டது